Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal

ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary

: https://doi.org/10.63300/tm12042026

Vol. 12 No. 04 (2026): September 2026, **p208-222** | Available online at: www.tamilmanam.in

Original Research Paper – Peer reviewed ✓

தமிழவன் சிறுகதைகளில் 'வாசகன்' மையமாதல்

"Reader-Centrism in the Short Stories of Tamilavan"

சி.கிருஷ்ண பிரியா,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),
பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி, கோவை -641014.

S. Krishna Priya*,
Ph.D Research Scholar (Full Time), PSG College of Arts and Science, Coimbatore – 641014.

முனைவர் லி.ராம்ராஜ்,
நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரி, கோவை -641014.

Dr. L. Ramraj,
Research Guide, Assistant Professor,
Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore - 641014
Email: drlramraj@gmail.com

Article history
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
krishnapriyasivadass@gmail.com

Abstract:
In the history of Tamil short stories, Tamilavan's works hold a prominent place for shifting the emphasis from traditional author-centric storytelling to the reader's interpretive experience through postmodern narrative strategies. Grounded in Roland Barthes' concept of the "Death of the Author" and Michel Foucault's ideas on authorial power, the primary objective of this research paper is to examine how Tamilavan's stories deconstruct the singular authority of the writer over the text. Based on Tamilavan's five major short story collections, this paper analyzes how he avoids confining stories to fixed conclusions, structuring them instead as 'open texts' that allow readers to derive meaning across multiple levels according to their own perspectives. In addition, this study situates Tamilavan's narrative strategies within a broader comparative frame by drawing on Western reader-response theorists such as Wolfgang Iser, Stanley Fish, and Louise Rosenblatt, thereby extending the theoretical scope of the original enquiry. Ultimately, these works possess a unique approach that freely grants the authority of textual interpretation to the reader, transforming them into the central focus of the reading process.

Keywords: *Tamilavan, Reader-Centrism, Postmodernism, Death of the Author, Tamil Short Stories, Reader-Response Theory, Wolfgang Iser, Magical Realism.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.17

சுருக்கம் (Abstract)

தமிழ் சிறுகதை வரலாற்றில் ஆசிரியரின் மையத்திற்கு பதில் வாசகனின் வாசிப்பனுபவத்திற்கு முதன்மையளிக்கும் பின்நவீனத்துவக் கதையாடலை உருவாக்கியதில் தமிழவனின் படைப்புகள் முதன்மையானவை. ரொலாண் பார்த் மற்றும் மிஷேல் ஃபூக்கோவின் கோட்பாட்டுப் பின்புலத்தில், பிரதியின் மீதான ஆசிரியரின் ஒற்றைக் கட்டுப்பாட்டைத் தமிழவனின் கதைகள் எவ்விதம் குலைக்கின்றன என்பதை விளக்குவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகிறது. இக்கட்டுரை தமிழவனின் ஐந்து சிறுகதைத் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு, கதையை ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட முடிவுக்குள் சுருக்கித் தராமல், வாசகன் தன் சொந்த சிந்தனைக்கேற்பப் பல்வேறு தளங்களில் பொருள்கொள்ளும் திறந்த பிரதிகளாக அமைத்துள்ள முறையை ஆராய்கிறது. மேலும், வொல்ஃப்காங் ஐசர், ஸ்டான்லி ஃபிஷ், லூயிஸ் ரோஸன்பிளாட் ஆகிய மேலைநாட்டு வாசகர்-மைய கோட்பாட்டாளர்களின் பார்வைகளையும் ஒப்பிட்டு, தமிழவனின் இடத்தை உலகளாவிய கோட்பாட்டுச் சூழலில் வைத்து இக்கட்டுரை விரிவுபடுத்துகிறது. இப்படைப்புகள் பிரதியின் பொருளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைச் வாசகனுக்கே வழங்கி, அவனை வாசிப்புச் செயல்பாட்டின் மையப்புள்ளியாக மாற்றும் தனித்துவமான போக்கினைக் கொண்டுள்ளன.

முக்கியச் சொற்கள்: தமிழவன், வாசகர் மையம், பின்நவீனத்துவம், ஆசிரியர் மரணம், தமிழ்ச் சிறுகதைகள், வாசகர்-துலங்குக் கோட்பாடு, வொல்ஃப்காங் ஐசர், மாய எதார்த்தவாதம்.

1. முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் சிறுகதை மரபு என்பது மனித வாழ்வின் எதார்த்தங்களையும் சமூகப் பிரச்சினைகளையும் பதிவு செய்கின்ற முதன்மையான உரைநடை வடிவமாகத் திகழ்கிறது. சமூகத்தில் நிகழும் ஒரு சிக்கல், ஆசிரியரின் மனப் பதிவாகி, அவர்தம் படைப்பாக்கத்தின் மூலம் ஒரு வடிவத்தை அடைந்து, இறுதியாக வாசகனைச் சென்று அடைகிறது. மரபான சிறுகதைகளில் சமூகப் பிரச்சினையை ஆசிரியர் எவ்வாறு பார்க்கிறாரோ, அதே ஒற்றைப் பார்வையிலேயே வாசகனும் அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசிரியர் மையப் பிரதி மேலோங்கியிருந்தது. தொடக்கம், சிக்கல், உச்சம், முடிவு என்ற குறிப்பிட்ட கட்டமைப்புடன் இயங்கிய இத்தகைய கதைகளில் வாசகனின் பங்கு என்பது வெறும் பார்வையாளனாக மட்டுமே இருந்தது. நாளடைவில், சிறுகதையின் உள்ளடக்கத்திலும் கதைசொல்லல் உத்திகளிலும் பரிணாம மாற்றங்கள் ஏற்பட்டன. மரபார்ந்த கதைசொல்லல் முறையிலிருந்து விலகி, ஆசிரியரின் அதிகாரத்தை நீக்கி, பிரதிக்குரிய

பொருளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை வாசகனுக்கே வழங்கும் வாசக மையப் பிரதி நோக்கி நவீனச் சிறுகதைகள் நகரத் தொடங்கின.

பிரதியை வாசிக்கும் வாசகன், தனது சொந்த அனுபவங்கள் மற்றும் சிந்தனைகளின் வழியே அப்பிரதிக்கு புதிய அர்த்தங்களை உருவாக்கும் முதன்மையானவனாக மாறுகிறான். அத்தகைய பின்நவீனத்துவப் போக்கில், மேலைநாட்டு அமைப்பியல் மற்றும் பின்-அமைப்பியக் கோட்பாடுகளைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்ததில் தமிழவனின் பங்கு மிக முக்கியமானது. ஆசிரியரை மையப்படுத்தும் மரபான நேர்க்கோட்டுக் கதையாடலைக் கலைத்து, பிரதியின் அமைப்பைக் குலைத்து, வாசகனை தமிழவன் முதன்மைப்படுத்துகிறார். அவ்வாறு ஆசிரிய மையப் பிரதியிலிருந்து விலகி, வாசகனை மையப்படுத்தும் கதையாடல் அமைப்பைத் தமிழவன் தன் சிறுகதைகளில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதையும், தமிழ் சிறுகதை உலகிற்கு அவரது பங்களிப்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகிறது.

இந்திய இலக்கியச் சூழலில் தமிழவன் முன்வைக்கும் இக்கோட்பாட்டு நிலைப்பாடு தனித்துவமானதாக இருந்த அதேவேளையில், இது உலக அளவில் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் மேலெழுந்த வாசகர்-மைய இலக்கியக் கோட்பாட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாகவும் அமைகிறது. மேற்கத்திய இலக்கியச் சூழலில் வொல்ஃப்காங் ஐசர், ஸ்டான்லி ஃபிஷ், லூயிஸ் ரோஸன்பிளாட் போன்ற கோட்பாட்டாளர்கள் முன்வைத்த வாசகர்-துலங்குக் கோட்பாடுகளும் (Reader-Response Theory), ரொலாண் பார்த், மிஷேல் ஃபூக்கோ ஆகியோர் முன்வைத்த ஆசிரியர் மரணம் மற்றும் ஆசிரியர்-சார்பு எனும் கோட்பாடுகளும் இணைந்தே பிரதியின் மீதான வாசகனின் அதிகாரத்தை நிலைநாட்டின. இக்கட்டுரையின் இறுதிப் பகுதியில், இக்கோட்பாடுகளுடன் தமிழவனின் படைப்புகளை ஒப்பிட்டு நோக்கும் ஒரு கூடுதல் பகுப்பாய்வும் முன்வைக்கப்படுகிறது.

2. தமிழ்ச் சிறுகதை: கதைகூறும் போக்குகள்

2.1. தொல்காப்பியமும் தமிழ்ச் சிறுகதை வேர்களும்

சிறுகதை என்பது மேலைநாட்டிலிருந்து வந்த நவீன வடிவமாகக் கருதப்பட்டாலும், அதன் வேர்கள் தமிழ் மரபிலேயே காணப்படுகின்றன. தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில்,

> *"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்*

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.17

பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்" (தொல். பொருள். 1420)

என்ற வரிகள் இடம்பெற்றுள்ளன. இதன் வழியாக, கற்பனைக் கதைகளும் எதார்த்தம் கலந்த நகைச்சுவைக் கதைகளும் தமிழ் மரபில் பழங்காலம் தொட்டே இருந்து வந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

2.2. மணிக்கொடியும் நவீனத் தொடக்கமும்

இருப்பினும், மேலைநாட்டுத் தொடர்பால் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்று, 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீன சிறுகதை வடிவம் உருப்பெற்றது. வ.வே.சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' தமிழின் முதல் நவீனச் சிறுகதையாகக் கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, 1930-களில் வெளிவந்த மணிக்கொடி இதழ் தமிழ் சிறுகதை வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. இது குறித்துப் புதிய தமிழ் இலக்கிய வரலாறு நூலில்,

> *"தமிழ் பாஷைக்கு ஒரு புதிய உயிரும் ஒரு புதிய மெருகும் கொடுத்த பெருமையில்*
> *ஒரு பகுதி மணிக்கொடிக்கு உண்டு. தமிழ் பாஷையில் முழுவதும் சிறுகதைகள்*
> *அடங்கிய ஒரு பத்திரிகை இல்லாதது ஒரு குறை. இந்தக் குறையை மணிக்கொடி*
> *நீக்கிவிட்டது" (பக். 251)*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சியில் மணிக்கொடியின் பங்களிப்பை உணர முடிகிறது.

2.3. தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் வகைப்பாடு

தமிழ் சிறுகதைகளின் பல்வேறு சிந்தனைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு, ச. தமிழ்ச்செல்வன் தனது தமிழ் சிறுகதையின் தடங்கள் என்ற நூலில் தமிழ்ச் சிறுகதை வரலாற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகிறார்:

1. மணிக்கொடி இதழ்
2. வணிக எழுத்து
3. இடதுசாரி முற்போக்கு படைப்புகள்
4. திராவிட இயக்கப் படைப்புகள்
5. தலித்திய படைப்புகள்

6. பெண் படைப்பாளர்கள் படைப்புகள்

இவ்வகைப்பாடுகளின் ஊடாகப் பயணித்த தமிழ்ச் சிறுகதை வரலாற்றில், புதுமைப்பித்தன், நா. பிச்சமூர்த்தி போன்ற மணிக்கொடி கால எழுத்தாளர்கள் மனித மனத்தின் ஆழ்நிலைகளையும், அழகியல் உணர்வுகளையும், எள்ளல் நடையையும், சமூக விமர்சனத்தையும் மொழியமைப்பின் மூலம் வெளிப்படுத்தினர். இதன் பிறகான காலகட்டத்தில் ஜி. நாகராஜன் மற்றும் ஜெயகாந்தனின் எதார்த்தவாத எழுத்துகளும், கி. ராஜநாராயணனின் கரிசல் வட்டார எழுத்துகளும் சிறுகதையை மக்களின் வாழ்க்கையோடு நெருக்கமாகக் கொண்டு சேர்த்தன. மேலும் மார்க்சிய, திராவிட இயக்கச் சிந்தனைகளும், பெண்களின் அகவுலகைப் பேசிய பெண்ணியக் குரல்களும் தலித்தியச் சிந்தனைகளும் மேலெழுந்தன.

இக்காலகட்டம் வரையிலும் தமிழ்ச் சிறுகதைகள் சமூகப் பிரச்சினைகளைப் பேசியபோதிலும், அவை பெரும்பாலும் தொடக்கம், நடுவில் ஒரு சிக்கல், இறுதியில் ஒரு தர்க்கரீதியான முடிவு என்ற நேர்க்கோட்டு அமைப்பையே கொண்டிருந்தன. சமூகத்தில் நிகழும் ஒரு சிக்கல், ஆசிரியரின் மனப் பதிவாகி, அவர்தம் படைப்பாக்கத்தின் மூலம் ஒரு வடிவத்தைப் பெற்று வாசகனை அடைந்தது. இக்கதைகளில் உள்ளடக்க ரீதியான மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், கதையின் பொருளைத் தீர்மானிக்கும் முதன்மை அதிகார சக்தியாக ஆசிரியரே விளங்கினார். வாசகன் பார்வையாளனாக மட்டுமே அமைந்தான்.

2.4. தமிழவனின் திருப்புமுனை

இத்தகைய சூழலில்தான் தமிழவன் கதையின் வடிவம், பிரதி, வாசகன் இடையிலான தொடர்பை முற்றிலும் தலைகீழாக மாற்றி அமைக்கிறார். ஜெயகாந்தன் மற்றும் ஜி. நாகராஜன் போன்றவர்கள் உள்ளடக்கத்தில் புதிய களங்களைக் கொண்டுவந்தனர் என்றால், தமிழவன் உள்ளடக்கத்தோடு சேர்த்துச் சிறுகதையின் வடிவத்தையே குலைத்து அமைத்தார். கதையின் பொருளைத் தான் தீர்மானிக்காமல், பிரதிக்குரிய பொருளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை வாசகனுக்கே வழங்குகிறார். இதன் மூலம், தமிழ் சிறுகதை வரலாற்றில் ஆசிரியரை முதன்மைப்படுத்திய மரபிலிருந்து விலகி, வாசகன் மையமாதல் என்ற பின்நவீனத்துவக் கதையாடல் வரலாற்றைத் தமிழவன் தொடக்கி வைக்கிறார்.

3. சிற்றிதழ் சூழலும் தமிழவனும்

சிறுகதை மரபில் அடுத்தகட்ட நகர்வை ஏற்படுத்தியது 1980-க்குப் பிந்தைய சிற்றிதழ் சூழலாகும்.

தமிழில் இலக்கியக் கோட்பாடுகளை முன்வைத்துத் தமிழவன் விவாதித்த காலகட்டத்தில், தமிழ்ச் சூழலில் இரு முக்கியத் தரப்புகள் தீவிரமாக இயங்கிவந்தன. இதனை ஜெயமோகன் பின்வருமாறு விளக்குகிறார்:

> *"இலக்கியத்தை முழுக்க முழுக்க அகவயமான ஒரு செயல்பாடாகக் காணும் தரப்பு ஒரு பக்கம். இலக்கியத்தை முழுக்க முழுக்க புறவயமான செயல்பாடாகக் காணும் மார்க்சியத் தரப்பு இன்னொரு பக்கம். அகவயப் பார்வை கொண்டவர்கள் அழகியல்வாதிகள் என்றும், புறவயப் பார்வை கொண்டவர்கள் முற்போக்குத் தரப்பினர் என்றும் சொல்லலாம். அழகியல்வாதிகள் மணிக்கொடி, எழுத்து, கசடதபற போன்ற சிற்றிதழ்களை நடத்தினர். முற்போக்கினர் சரஸ்வதி, சாந்தி, தாமரை, நிகழ், படிகள் எனச் சிற்றிதழ்களை நடத்தினர்."*
>
> *(தமிழவனின் மாற்றுக் குரல்கள், பக். 390)*

அழகியல்வாதத்தின் 'கலை கலைக்காகவே' என்ற நிலைப்பாட்டையும், முற்போக்குவாதத்தின் 'கலை சமூகத்திற்காகவே' என்ற நேர்க்கோட்டுத் தர்க்கத்தையும் பின்நவீனத்துவக் கோட்பாடுகள் வழியே தமிழவன் ஒரே நேரத்தில் நிராகரித்தார். இத்தகைய இருவேறு துருவ நிலைகளுக்கு மத்தியில், இலக்கியக் கோட்பாட்டாளர், திறனாய்வாளர், படைப்பாளி என்ற முப்பரிமாணங்களில் இயங்கிய தமிழவன், அமைப்பியல் மற்றும் பின்-அமைப்பியக் கோட்பாடுகள் வழியே புதிய இலக்கிய விவாதத்தைத் தமிழ்ச் சூழலில் உருவாக்கினார்.

நடை, கசடதபற, பிரக்ஞை போன்ற சிற்றிதழ்களின் வரிசையில், தமிழவனின் பங்களிப்பு இதழியல் தளத்திலும் முதன்மையானதாக இருந்தது. கோட்பாடு திறனாய்வு திறனாய்வாளர் நூலில் (பக். 114) குறிப்பிட்டுள்ளபடி, பரிமாணம், வித்தியாசம், இலக்கிய வெளிவட்டம், படிகள், அலை, சிற்றேடு, கொலுகு, மேலும் போன்ற பல சிற்றிதழ்கள் வழியே கோட்பாட்டு விவாதங்களை அவர் முன்னெடுத்தார்.

4. தமிழவன் அறிமுகம்

கார்லோஸ் சபரிமுத்து என்ற இயற்பெயர் கொண்ட தமிழவன், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழ், மலையாளம், கன்னடம், ஆங்கிலம் எனப் பன்மொழிப் புலமை பெற்றவர். தமிழில் அமைப்பியல், பின்நவீனத்துவக் கோட்பாடுகளை முதன்முதலில் அறிமுகப்படுத்திய இவர், கோட்பாட்டாளராக மட்டுமின்றிப் புனைவுத் தளத்திலும் புதிய வடிவச் சோதனைகளை நிகழ்த்தியவர்.

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.17

இவரது நாவல்களான ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் (மாய எதார்த்தவாதம்), சரித்திரத்தில் படிந்த நிழல்கள் (வரலாற்று அழித்தெழுதுதல்), G.K எழுதிய மர்மநாவல், வார்ஸாவில் ஒரு கடவுள் (புலம்பெயர் வாழ்வியல்), ஆடிப்பாவை போல (மொழி அரசியல்), ஷம்பாலா போன்றவை தமிழ் நாவல் அமைப்பில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவை.

மேலும், பூனையும் லெதர் பை வைத்திருப்பவனும், இரட்டைச் சொற்கள், நடனக்காரியான 35 வயது எழுத்தாளர், கருஞ்சிவப்பு ஈசல்கள், இறந்து போனவன் பேசிக்கொண்டே இருக்கிறான் ஆகிய இவரின் சிறுகதைத் தொகுப்புகள், மரபார்ந்த கதைசொல்லலைத் தகர்த்துப் பின்நவீனத்துவக் கதையாடலைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய முதன்மைப் படைப்புகளாகும்.

5. தமிழவன் சிறுகதைகளில் பின்நவீனத்துவ வடிவ மாற்றங்கள்

தமிழவனின் முதன்மையான முக்கியத்துவம் என்பது, மேலைநாட்டுக் தத்துவங்களை வெறும் கோட்பாடுகளாக அறிமுகப்படுத்துவதோடு நின்றுவிடாமல், அவற்றைச் சிறுகதைப் புனைவுகளாகவே மாற்றிப் புதியதொரு எழுத்துமுறையை தமிழுக்குத் தந்ததேயாகும். குறிப்பாக, கதையின் பொருளைத் தீர்மானிக்கும் உரிமையை வாசகனுக்கே வழங்கும் பல பின்நவீனத்துவப் பண்புகளை இவருடைய சிறுகதைகளில் காண முடிகிறது. தமிழவன் கதைகளில் வெளிப்படும் அவ்வாறான வடிவ மாற்றங்களைப் பின்வரும் தலைப்புக்களின் வழியே விரிவாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

5.1. ஆசிரியர் மையம் அழிதலும் வாசகர் மையமாதலும்

மரபார்ந்த சிறுகதைகளில் ஆசிரியர் என்ன சொல்கிறாரோ அதுவே இறுதியான உண்மையாகக் கொள்ளப்பட்டது. ஆனால் தமிழவனின் கதையாடலில், பிரெஞ்சு சிந்தனையாளரான ரொலாண் பார்த் குறிப்பிடுவது போல "ஆசிரியனின் மரணம்" (Death of the Author) நிகழ்கிறது. ரொலாண் பார்த்தின் ஆசிரியரின் மரணம் என்ற நூலில் குறிப்பிடுவது போல:

> *"ஆசிரியனின் மரணத்தை முன்னிட்டு வாசகன் பிறக்கிறான்." (ப.39)*

> *"எழுத்து என்பது ஆசிரியர் என்ற கடவுளால் அருளிச் செய்யப்படும் தெய்வீகக் கோட்பாடு அல்ல... பிரதி என்பது எண்ணற்ற கலாசார மையங்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்களின் திசுக்கள் ஆகும்." (ப.43)*

என்று கூறப்படுகிறது. கதையை நேர்க்கோட்டில் முடித்துத் தருவது ஆசிரியரின் வேலை அல்ல.

| Copyright © Author(s)

மாறாக, வாசிக்கும் வாசகனே தன் அனுபவத்திற்கு ஏற்பக் கதையின் பொருளைத் தீர்மானிக்கிறான். ஆசிரியரின் இத்தகைய ஒற்றை அதிகாரத்தை உடைத்து, பிரதியைச் சுதந்திரமான வாசிப்புக்குத் திறந்துவிடும் அமைப்பைத் தமிழவனின் சிறுகதைப் புனைவுகளில் பரவலாகக் காண முடிகிறது.

இதன் காரணமாகவே, தமிழவனின் கதைகளில் ஒற்றைப் பொருள் சாத்தியமாவதில்லை. அங்குப் பொருள் அல்லது அர்த்தம் என்பது நிலையற்றதாகவும், பன்மைத்துவம் கொண்டதாகவும் மாறுகிறது. மொழியரசியல், இனவெறி, யுத்தம், சாதிய முரண்பாடுகள், இந்தி எதிர்ப்பு, மார்க்சியம், காலனிய நினைவுகள், தமிழ்த் தொன்மங்கள், நாட்டார் கதைகள், ஈழப்போர் நினைவுகள், திராவிட இயக்க விமர்சனம் போன்றவை தமிழவன் கதைகளில் மையப்பொருட்களாகப் பேசப்பட்டாலும், இக்கதை இதைத்தான் சொல்ல வருகிறது என்ற ஒற்றைப் புள்ளியிலான முடிவிற்கு வாசகனால் வர முடியாது. மிஷேல் ஃபூக்கோ சுட்டுவது போல, ஆசிரியன் என்பவன் ஒரு கருத்தியலால் ஆன உருவம் மட்டுமே. பார்த் நிறுவுவது போல், ஒரு பிரதியை எழுதி முடித்ததும் ஆசிரியன் இறந்து அவனுள் இருக்கும் வாசகனே பிறக்கிறான் என இவர்கள் இருவரும் வாசக முதன்மைக்கு விளக்கம் தருகின்றனர். இக்கோட்பாட்டையே தமிழவனும் தனது படைப்புகளில் முன்வைத்து, ஆசிரியரை விடுத்து வாசகனை மையப்படுத்துகிறார்.

5.2. நேர்க்கோடற்ற கதையாடல்

மரபார்ந்த சிறுகதைகள் காலவரிசைக்கு உட்பட்ட நேர்க்கோட்டு முறையில் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தமிழவனின் கதையாடலில், இத்தகைய மரபார்ந்த கால ஒழுங்கு உடைக்கப்பட்டு, ஒரே நேரத்தில் பல்வேறு தளங்களில் இயங்கும் நேர்க்கோடற்ற வடிவம் மேலெழுகிறது.

சான்றாக, தமிழவனின் 'நடனக்காரியான 35 வயது எழுத்தாளர்' என்ற தொகுப்பில் உள்ள 22 சிறுகதைகளையும் குறிப்பிடலாம். இக்கதைகளில் மையமான ஒரேயொரு கதாபாத்திரமோ அல்லது ஒற்றைக் கதையோ முதன்மை பெறுவதில்லை. மாறாக, அவை துண்டாக்கப்பட்ட உதிரி நிகழ்வுகளின் தொகுப்பாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பிலுள்ள 'பழைய நாணய விற்பனை', 'மூவரும் மௌனமானார்கள்', 'மெழுகுவர்த்தி எரிவதைப் பார்த்தேன்' போன்ற கதைகளில் வழக்கமான பெரிய சம்பவங்களோ அதிர்ச்சிகளோ நிகழ்வதில்லை. அதற்குப் பதிலாக, நவீன மனிதனின் தனிமை, மனித உறவுகளுக்கு இடையிலான தொடர்பின்மை, சலிப்புத்தன்மை போன்ற நுண் உணர்வுகளே வெளிப்படுகின்றன.

அதேபோல், 'கருஞ்சிவப்பு ஈசல்' என்ற கதையில் கதாபாத்திரங்களுக்குப் பெயர்கள் சூட்டப்படாமல், அவன், அவள் என்ற சுட்டுப்பெயர்களாலேயே அடையாளப்படுத்தப்படுகின்றனர். வெவ்வேறு காலகட்டத்து நினைவலைகளின் சிதறலாகவே இக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கதையின் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் எவ்வித நேர்க்கோட்டுத் தொடர்பும் இருப்பதில்லை. வாசகன் பிரதியின் எந்தவொரு புள்ளியிலிருந்தும் வாசிக்கத் தொடங்கித் தன் சொந்த அனுபவத்தில் பொருள் கொள்ள முடியும். இவ்வாறாக, வழக்கமான கதைசொல்லும் முறையை உடைத்து, வாசகனுக்குப் புதிய வாசிப்பு அனுபவத்தைத் தரும் நேர்க்கோடற்ற கதையாடலைத் தன் கதைகளில் பயன்படுத்துகிறார்.

5.3. கட்டவிழிப்பு

மரபான சிறுகதைகள் பல நேரங்களில் சமூகத்தில் நிலவிய பழைய சிந்தனைகளையும் அமைப்புகளையும் கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் போக்கைக் கொண்டிருந்தன. புதுமைப்பித்தனின் பொன்னகரம் போன்ற கதைகளில் சமூகப் பிரச்சினைகள் குறித்துக் கேள்விகள் கேட்கப்பட்டாலும், சமூக அமைப்பைக் கட்டவிழ்ப்பதோ அல்லது குலைப்பதோ அங்கு முழுமையாக நிகழவில்லை.

இப்போக்கை மாற்றத் தமிழவன், தெரிடாவின் கட்டவிழ்ப்புக் கோட்பாட்டைத் தன் கதையாடலில் கையாண்டுள்ளார். சான்றாக, 'புளியமரத்திலிருந்து' என்ற கதையில், செல்லி என்ற பெண்ணும் கதையாசிரியனும் ஆவிகளாக மாறி, ஊரிலிருக்கும் பெரிய புளியமரத்தின் உச்சிக்கிளையில் அமர்ந்து, உயிருடன் இருந்தபோது தங்களை ஒடுக்கிய முருகேசன் போன்ற அதிகார வர்க்கத்தைப் பார்த்து உரக்கச் சிரிக்கிறார்கள். ஊரார் அவர்களை ரத்தக் காட்டேரிகள் என்று அஞ்சி ஒதுங்குகின்றனர்.

இக்கதையில், புளியமரத்தில் பேய் தொங்கும் என்ற நாட்டார் நம்பிக்கையைத் தமிழவன் அப்படியே பயன்படுத்தாமல் கட்டவிழ்ப்பிற்கு உட்படுத்துகிறார். எளிய மனிதர்களை ஒடுக்கிய அதிகார வர்க்கத்திற்கு எதிராக, அதே பேய் பிம்பத்தையே ஒரு எதிர்ப்புக் குறியீடாகவும், அதிகாரத்தை பகடி செய்யும் ஆயுதமாகவும் மாற்றி அமைக்கிறார்.

5.4. மாய எதார்த்தவாதம்

லத்தீன் அமெரிக்கச் சூழலில் அரசியல் ஒடுக்குமுறைகளையும், இராணுவ ஆட்சியின் கொடுமைகளையும் வெளிப்படுத்த மாய எதார்த்தவாதம் பயன்பட்டது. தமிழ்ச் சூழலில் நிலவும்

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.17

மறைமுகச் சமூக ஒடுக்குமுறைகளை வெளிப்படுத்தத் தமிழவன் இவ்வுத்தியைக் கையாள்கிறார். தமிழின் முதல் மாய எதார்த்தவாத நாவலான 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' என்பதற்கு வித்திட்ட தமிழவன், தனது சிறுகதைகளிலும் இப்போக்கைப் பயன்படுத்தியுள்ளார்.

கணேசனின் மனைவி பறந்து போனாள் கதையில் கணவனின் இம்சை தாங்காமல் மனைவி ஆகாயத்தில் பறந்து போவதும், அற்புதம் கதையில் தன் தந்தையைப் பார்க்கும்போது மட்டும் வெள்ளையப்பனுக்குக் கண் தெரியாமல் போவதும், இருவராய் வாழ்ந்தவன் கதையில் ஒரு மனிதனுக்கு இரண்டு பிறந்தநாட்கள் இருப்பதும், நிறம் கதையில் மூக்கில்லாத மனிதர்களும், தகரக்கொட்டை கதையில் தவளை மனிதர்கள் வருவதும் மாய எதார்த்தவாதப் புனைவுகளாகும்.

இத்தகைய விசித்திர பிம்பங்களைத் தமிழவன் சுவாரசியத்திற்காகப் பயன்படுத்தாமல், சமூக அவலங்கள், குடும்ப வன்முறைகள், அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறைகள் ஆகியவற்றை உருவக வடிவில் மறைமுகமாக வெளிப்படுத்தவே பயன்படுத்துகிறார். "மாய எதார்த்தவாதம்" எனும் இலக்கியப் பதம் 1940-களில் கியூப நாவலாசிரியர் அலெஹோ கார்பென்தியேரால் லத்தீன் அமெரிக்க இலக்கியப் பண்பினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது; காலனியத்துக்குப் பிந்தைய சமூகங்கள் தம்மைச் சுற்றியுள்ள இரட்டை யதார்த்தங்களை - வென்றவரின் யதார்த்தத்தையும் தோற்றவரின் யதார்த்தத்தையும் - புரிந்துகொள்ள முயலும் இலக்கிய உத்தியாக இது பல அறிஞர்களால் கருதப்படுகிறது. இக்கோட்பாட்டு வரிசையில் நோக்கும்போது, காலனியத்திற்குப் பிந்தைய தமிழ்ச் சூழலில் மொழி, சாதி, பாலினம் தொடர்பான ஒடுக்குமுறைகளை மறைமுகமாக வெளிப்படுத்த தமிழவன் இவ்வுத்தியைப் பயன்படுத்துகிறார் எனக் கொள்ளலாம்.

5.5. வினா-விடை தலைப்பமைவும் வடிவமும்

தமிழவன் சிறுகதைகளின் தலைப்புகள் மரபான பெயரிடல் முறையிலிருந்து மாறுபட்டு, உரையாடலின் வினாவாகவோ அல்லது விடையாகவோ அமைகின்றன.

வினா வடிவத் தலைப்புகள்:

1. உங்களுக்குப் பாரம்பரியம் இல்லையென்பது உண்மையா?
2. கெமிஸ்ட்ரி பாடம் புரியுமா? போன்ற தலைப்புகள் வாசகனைப் பிரதியோடு நேரடியாக உரையாட வைக்கின்றன.

விடை/கூற்று வடிவத் தலைப்புகள்:

1. கனடாவில் என்ன வேலை செய்கிறாய் என்றால் கோபப்பட மாட்டான்

2. ஒரு மெழுகுவர்த்தி எரிவதைப் பார்த்தேன்

3. உங்களுக்குப் புரியும் கதை போன்ற தலைப்புகள் ஏதோவொரு சூழலின் விடையாகவோ அல்லது கதையாடலின் தொடக்க வாக்கியமாகவோ அமைகின்றன.

தலைப்பில் மட்டுமின்றி, கதையின் வடிவத்தையே வினா-விடை அமைப்பில் கட்டமைத்ததற்கு 'ஹர்ஷவர்த்தனார் அறிவு' என்ற சிறுகதை சிறந்த சான்றாகும். அரச வேடத்தைக் கலைத்துச் சாமானியனாக வரும் ஹர்ஷவர்த்தனன் கேட்கும் கேள்விகளுக்கு, மக்கள் அனைவரும் அவரவர் வாழ்வியல் தேவை சார்ந்த பதில்களைத் தருகின்றனர். இதன் மூலம், அறிவு என்பது ஏதோ ஒரு மையத்தில் அல்லது அரண்மனையில் இருப்பது அல்ல. அது சாமானிய மக்களின் அன்றாட வாழ்வியல் அனுபவங்களில் சிதறிக்கிடக்கிறது என்ற பின்நவீனத்துவக் கருத்தியலை இவ்வடிவத்தின் மூலம் தமிழவன் நிறுவுகிறார்.

சில கதைகளில் இருமை எதிர் இணைவு என்னும் பின்நவீனத்துவ உத்தியைக் கொண்டும் தலைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிதறுவது × ரூபம்

பூட்ஸ் கால் × நட்சத்திரம்

கைது செய்தல் × காத்திருத்தல்

தகரக் கொட்டை × தவளை மனிதர்

பிடிக்காத நிறம் × போலீஸ் வேன்

பூனை × லெதர் பை

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத அல்லது எதிரெதிர் துருவங்களாக இருக்கும் இரு பிம்பங்களை ஒன்றாக இணைத்துத் தலைப்பாக்குவதன் மூலம், வாசிப்புத் தொடக்கத்திலேயே வாசகனுக்குள் புதுவிதத் தேடலை தமிழவன் உண்டாக்குகிறார். இவ்வாறாக, மேற்கண்ட உத்திகள் அனைத்தும் தமிழவனின் சிறுகதைகளுக்கு பின்நவீனத்துவ தன்மையை வழங்கி அவரது கதையாடலைத் தனித்துவப்படுத்துகின்றன.

6. மேலைநாட்டு வாசகர்-மைய கோட்பாடுகளும் தமிழவனும்: ஓர் ஒப்பீட்டு நோக்கு

தமிழவனின் வாசகர்-மையக் கதையாடலை மேலும் ஆழமாகப் புரிந்துகொள்ள, இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் மேற்கத்திய இலக்கியச் சூழலில் மேலெழுந்த வாசகர்-துலங்குக் கோட்பாடுகளுடன் (Reader-Response Theory) அவரது படைப்புகளை ஒப்பிட்டு நோக்குவது

பயனுடையதாக அமையும். இக்கோட்பாட்டு மரபு, இலக்கியப் பிரதியின் பொருள் ஆசிரியனிடமோ பிரதியிடமோ மட்டும் நிலைத்திருப்பதில்லை; அது வாசகனுக்கும் பிரதிக்கும் இடையே நிகழும் ஒரு உயிரோட்டமான, தொடர்ச்சியான ஊடாட்டத்தின் விளைவே எனும் அடிப்படைக் கொள்கையை முன்வைக்கிறது.

6.1. வொல்ஃப்காங் ஐசரின் இடைவெளிக் கோட்பாடு

ஜெர்மானிய திறனாய்வாளரான வொல்ஃப்காங் ஐசர் தமது வாசிப்புச் செயல் பற்றிய கோட்பாட்டில், பிரதியில் திட்டமிட்டு விடப்படும் "வெற்றிடங்கள்" அல்லது "இடைவெளிகள்" (gaps/blanks) வாசகனின் கற்பனையாலேயே நிரப்பப்பட வேண்டும் என வாதிடுகிறார். பிரதி என்பது நிலையான, முழுமையான ஒரு பொருள் அல்ல; அது வாசகனுடன் நிகழும் ஊடாட்டத்தின் வழியாக மட்டுமே முழுமையடையும் ஒரு "மெய்நிகர்" கட்டமைப்பு என்பது இவரது கருத்து. இக்கோட்பாட்டு நோக்கில் நோக்கும்போது, தமிழவனின் 'கருஞ்சிவப்பு ஈசல்' கதையில் கதாபாத்திரங்களுக்குப் பெயரிடாமல் அவன்/அவள் என்ற சுட்டுப்பெயர்களை மட்டுமே பயன்படுத்துவது, ஐசர் குறிப்பிடும் "இடைவெளி"யை வேண்டுமென்றே உருவாக்கும் ஒரு உத்தியாகக் கருதலாம். பெயர், பின்புலம், உறவுமுறை போன்ற தகவல்களை மறைப்பதன் மூலம், அவற்றை நிரப்பும் பொறுப்பைத் தமிழவன் வாசகனிடமே ஒப்படைக்கிறார்.

6.2. ஸ்டான்லி ஃபிஷின் விளக்கமுறைச் சமூகங்கள்

அமெரிக்க திறனாய்வாளரான ஸ்டான்லி ஃபிஷ், ஒரு பிரதியின் பொருள் அதனுள் முன்கூட்டியே பொதிந்திருப்பதில்லை; மாறாக, ஒரு குறிப்பிட்ட "விளக்கமுறைச் சமூகத்தைச்" (interpretive community) சேர்ந்த வாசகர்கள் பகிர்ந்துகொள்ளும் பொதுவான கருதுகோள்களின் அடிப்படையிலேயே பொருள் கட்டமைக்கப்படுகிறது என வாதிடுகிறார். இக்கோட்பாட்டின் வெளிச்சத்தில், தமிழவனின் கதைகளில் இடம்பெறும் மொழியரசியல், ஈழப்போர் நினைவுகள், சாதிய முரண்பாடுகள் போன்ற பொருண்மைகள் ஒவ்வொரு வாசகச் சமூகத்திடமும் வெவ்வேறு அர்த்தங்களை உருவாக்கக்கூடும் என்பதை விளக்கிக்கொள்ளலாம். ஓர் அரசியல் நோக்குடைய வாசகச் சமூகத்திற்கும், ஓர் அழகியல்வாத வாசகச் சமூகத்திற்கும் ஒரே கதை வெவ்வேறு பொருள்களைத் தரக்கூடும் என்பது தமிழவன் கதைகளின் பன்மைத்துவத் தன்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

6.3. லூயிஸ் ரோஸன்பிளாட்டின் பரிமாற்றக் கோட்பாடு

அமெரிக்க கல்வியியலாளர் லூயிஸ் ரோஸன்பிளாட் முன்வைக்கும் "பரிமாற்றக் கோட்பாட்டில்" (transactional theory), வாசிப்பு என்பது வாசகனுக்கும் பிரதிக்கும் இடையே நிகழும் ஒரு உயிரோட்டமான பரிமாற்றமாகும்; அதில் எப்போதும் நிலைத்த, ஒரே ஒரு சரியான பொருள் இருக்க முடியாது. இக்கோட்பாட்டின் பார்வையில் நோக்கும்போது, தமிழவன் தன் கதைகளை ஒற்றை முடிவுக்குள் அடைக்காமல் 'திறந்த பிரதி'களாக அமைத்திருப்பது, வாசகனும் பிரதியும் இணைந்து பொருளை உருவாக்கும் பரிமாற்ற செயல்பாட்டிற்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

6.4. மிஷேல் ஃபூக்கோவின் ஆசிரியர்-சார்பு கோட்பாடு

ஃபூக்கோ தமது "ஆசிரியர் என்பவர் யார்?" என்ற கட்டுரையில், ஆசிரியர் என்பவர் ஒரு உயிருள்ள தனிமனிதர் மட்டுமல்ல, மாறாக பிரதியைச் சுற்றி சமூகமும் நிறுவனங்களும் கட்டமைக்கும் ஒரு "செயல்பாடு" (function) என வாதிடுகிறார். இக்கோட்பாட்டின்படி, "ஆசிரியர்" என்ற பெயர் பிரதிக்கு அதிகாரத்தையும் வரம்பையும் வழங்கும் ஒரு சமூக-நிறுவன உத்தியாகவே செயல்படுகிறது. தமிழவன் தன் கதைகளில் இந்த ஆசிரியர்-சார்பு அதிகாரத்தைத் தகர்த்து, பிரதியின் பொருளை நிர்ணயிக்கும் இடத்தை வெற்றிடமாக்கி, அதை வாசகன் நிரப்பும் இடமாக மாற்றுகிறார் என்பதைக் காணமுடிகிறது.

6.5. ஒப்பீட்டு அவதானிப்பு

மேற்கண்ட மேலைநாட்டுக் கோட்பாடுகளையும் தமிழவனின் படைப்புகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது, ஐசர், ஃபிஷ், ரோஸன்பிளாட் ஆகியோர் கோட்பாட்டு மட்டத்தில் முன்வைத்த வாசகர்-மையக் கொள்கைகளைத் தமிழவன் தனது சிறுகதைகளின் வடிவ அமைப்பிலேயே நடைமுறைப்படுத்திக் காட்டுகிறார் எனலாம். பெயரிடாத கதாபாத்திரங்கள், நேர்க்கோடற்ற கால அமைப்பு, வினா-விடை தலைப்புகள், மாய எதார்த்த உருவகங்கள் ஆகியவை அனைத்துமே பிரதியில் வேண்டுமென்றே உருவாக்கப்படும் "இடைவெளிகளாகவும்", பன்முக விளக்கத்திற்கான வாய்ப்புகளாகவும் செயல்படுகின்றன. இவ்வகையில், தமிழவன் மேற்கத்திய கோட்பாட்டு மரபை வெறுமனே மொழிபெயர்த்துச் சொல்லாமல், தமிழ்ச் சூழலின் சமூக-அரசியல் பின்புலத்திற்கு ஏற்ப அதைப் புனைவாக்கம் செய்திருப்பது அவரது தனித்துவமான பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

7. முடிவுரை

இவ்வாய்வு, தமிழவனின் சிறுகதைகளில் வெளிப்படும் பின்நவீனத்துவ உத்திகளையும், அது

ஆசிரிய மையக் கதையாடலிலிருந்து வாசகர் மையக் கதையாடலாக உருமாறும் போக்கினையும் விரிவாக ஆராய்ந்தது. தொல்காப்பியக் கதை மரபிலிருந்து தொடங்கி, மணிக்கொடி காலம் வரையிலும் தமிழ் சிறுகதைகள் எதார்த்தவாத நேர்க்கோட்டு அமைப்பிலேயே இயங்கின. இக்கட்டமைப்பைத் தகர்த்து, ஆசிரியரின் ஒற்றை அதிகாரத்தை நீக்கி, வாசகனை மையப்படுத்தும் கதையாடலைத் தமிழவன் உருவாக்கியுள்ளார் என்பது ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

1980-க்குப் பிந்தைய சிற்றிதழ் சூழலில், அழகியல்வாதத்தின் 'கலை கலைக்காகவே' என்ற நிலைப்பாட்டையும், முற்போக்குவாதத்தின் 'கலை சமூகத்திற்காகவே' என்ற தர்க்கத்தையும் பின்நவீனத்துவக் கோட்பாடுகள் வழியே தமிழவன் நிராகரித்துள்ளார். ரொலாண் பார்த்தின் ஆசிரியர் மரணம் மற்றும் மிஷேல் ஃபூக்கோவின் அதிகாரக் கோட்பாட்டின் பின்புலத்தில், பிரதியின் பொருளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை ஆசிரியர் தன்வசம் வைத்துக்கொள்ளாமல் வாசகனுக்கே வழங்கியுள்ளார் என்பது நிறுவப்பட்டுள்ளது.

தமிழவனின் சிறுகதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள நேர்க்கோடற்ற கதையாடல், சுட்டுப்பெயர்கள் பயன்பாடு, 'புளியமரத்திலிருந்து' கதையில் வெளிப்படும் கட்டவிழ்ப்பு உத்தி, சமூக ஒடுக்குமுறைகளைப் பேசும் மாய எதார்த்தவாதம், மற்றும் வினா-விடை வடிவத் தலைப்பமைப்புகள் ஆகியவை இக்கட்டுரையில் விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், வொல்ஃப்காங் ஐசர், ஸ்டான்லி ஃபிஷ், லூயிஸ் ரோஸன்பிளாட் ஆகிய மேலைநாட்டு வாசகர்-மைய கோட்பாட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டு நோக்கு, தமிழவனின் கோட்பாட்டு இடத்தை உலகளாவிய இலக்கியச் சூழலில் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழவனின் சிறுகதைகள் கதையை ஒற்றைப் பொருளுக்குள் அடைக்காமல், பன்முக வாசிப்பிற்குத் திறந்துவிடும் திறந்த பிரதிகளாக இயங்குகின்றன என்பது இவ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்பாகும். தமிழ் சிறுகதை வரலாற்றில் வாசகர் மையக் கதையாடலைத் தொடங்கி வைத்ததில் தமிழவனின் பங்களிப்பு மிக முதன்மையானது என்பதை இக்கட்டுரை முடிவுறுத்துகிறது.

நூல் பட்டியல் (References – MLA 9th Edition)

[1.] Barthes, Roland. "The Death of the Author." Image-Music-Text, translated by Stephen Heath, Hill and Wang, 1977, pp. 142–148.

[2.] பார்த், ரொலாண். ஆசிரியரின் மரணம். மொழிபெயர்ப்பு: எம்.ஜி. சுரேஷ், 2ஆம் பதிப்பு, அடையாளம் பதிப்பகம், 2018.

[3.] Fish, Stanley. Is There a Text in This Class? The Authority of Interpretive Communities. Harvard University Press, 1980.

[4.] Foucault, Michel. "What Is an Author?" Language, Counter-Memory, Practice: Selected Essays and Interviews, translated by Donald F. Bouchard and Sherry Simon, Cornell University Press, 1977, pp. 113–138.

[5.] இளம்பூரணர் (உரையாசிரியர்). தொல்காப்பியம். கௌரா பதிப்பகம், 2017.

[6.] Iser, Wolfgang. The Act of Reading: A Theory of Aesthetic Response. Johns Hopkins University Press, 1978.

[7.] விக்னேஷ், க. கோட்பாட்டு திறனாய்வு திறனாய்வாளர்கள். யாவரும் பதிப்பகம், 2025.

[8.] "Magic Realism." Encyclopaedia Britannica, Encyclopaedia Britannica, Inc., www.britannica.com/art/magic-realism. Accessed 4 Sept. 2026.

[9.] சகதேவன், ப. தமிழவனின் மாற்றுக் குரல்கள். யாவரும் பதிப்பகம், 2022.

[10.] தமிழ்ச்செல்வன், ச. தமிழ் சிறுகதையின் தடங்கள். பாரதி புத்தகாலயம், 2022.

[11.] தமிழவன். இரட்டைச் சொற்கள். அடையாளம் பதிப்பகம், 2011.

[12.] தமிழவன். கருஞ்சிவப்பு ஈசல்கள். எதிர் வெளியீடு, 2022.

[13.] தமிழவன். நடனக்காரியான 35 வயது எழுத்தாளர். புது எழுத்து, 2015.

[14.] தமிழவன். பூனையும் லெதர் பை வைத்திருப்பவனும் (தமிழவன் கதைகள்). யாவரும் பதிப்பகம், 2024.

[15.] தமிழவன். இறந்துபோனவன் பேசிக்கொண்டே இருந்தான். எதிர் வெளியீடு, 2025.

[16.] பாலசுப்பிரமணியம், சிற்பி, மற்றும் நீல பத்மநாபன். சாகித்ய அகாதமி வெளியீடு. சாகித்ய அகாதமி, 2023.

[17.] Rosenblatt, Louise M. Literature as Exploration. 5th ed., Modern Language Association, 1995.

ஆசிரியர் பிரகடனம் (நலன் முரண்பாடு அறிக்கை)

இக்கட்டுரையின் ஆசிரியர்கள், இக்கட்டுரையின் ஆய்வு, எழுத்து, அல்லது வெளியீடு தொடர்பாக எவ்விதமான நிதி ரீதியான, தனிப்பட்ட, அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றனர். இக்கட்டுரை எந்தவொரு நிறுவனத்தின் அல்லது நபரின் நிதியுதவியின்றி, முற்றிலும் கல்வி நோக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சுயேச்சையான ஆய்வாகும். இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மேற்கோள்களும், சான்றுகளும் அந்தந்த மூல நூல்கள்/ஆசிரியர்களுக்குரியவை என ஆசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.